**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 398/2019 PW . 1**

**பெயர் : மதுவரன்** **தந்தை/கணவர் பெயர்: ராமநாதன்**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.09.2025

---

**(எதிரி ஆஜரில்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**25.09.2025 எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1. சம்பவம் உண்மையில் நடந்திருந்தால் நான் கொடுத்த புகாருக்கு நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றாலும் போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க புகாரை மாற்றி எழுதிக்கொடுத்திருக்க மாட்டேன் என்றால் சரியல்ல. போலீசார் சொன்னதால் எழுதிக்கொடுத்தேன். 26ம் தேதி நடந்த சம்பவத்திற்கு 29ம் தேதி புகார் கொடுத்ததற்கு ஏற்பட்ட காலதாமதத்திற்கு சரிசெய்வதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல. ஏதோ புகார் கொடுத்து ஏதோ வழக்கு பதிவு செய்து எதிரிகளை அலைக்கழிக்கவேண்டும் என்பதற்காக வழக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது புகாரை பாலு மற்றும் இரண்டு நபர்கள் அளவீடு செய்ததாக சொல்லியுள்ளதில் அவர்கள் பெயரை சொல்லவில்லை என்றால் பெயர்தெரியாது. அதனால்சொல்லவில்லை. அவர்களை யாரென்று விசாரித்து தெரிந்து கொண்டேன். அவர்கள் வீடு கட்ட வந்த பொறியாளர்கள் ஆவார்கள். இடத்தை அளக்க சர்வேயருக்கு மனுவை எதிரி தாக்கல் செய்தார் என்றால் சரிதான். சர்வேயர் மூலம் இடத்தை எதிரி அளப்பதை தடை செய்வதற்காக நாங்கள் போய் பிரச்சனை செய்தோம் என்றால் இல்லை. புகாரிலும், மு.விசாரணையிலும் பாலு எனது அப்பாவை எந்த இடத்தில் அடித்து தள்ளினார் என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. 3வது எதிரி எனது தாயாரை எந்த இடத்தில் கல்லால் அடித்தார் என்பதை புகாரிலும், மு.விசாரணையிலும் என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. புகாரில் சொல்லியுள்ளேன். 1வது எதிரி கல்லால் அடித்தார் என்பதை புகாரில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன்.

2. தாவா இடம் சம்பந்தமாக எதிரிகளுக்கும் எங்களுக்கும் நீண்ட காலமாக பிரச்சனை உள்ளது என்றால் இல்லை.அளவீடு செய்யும் வரை பிரச்சனை இல்லை. இடம் சம்பந்தமாக எங்களுக்கும் எதிரிகளுக்கும் முன்விரோதம் இருந்தது என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் தரப்பில் கொடுக்கப்பட்ட புகாருக்கு எனது அப்பா, அம்மா பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளதுஎன்றால் சரிதான். எதிரிகள் எங்களிடம் பிரச்சனை செய்யவில்லை என்றாலும் நாங்கள் எதிரிகளிடம் பிரச்சனை செய்து எதிரிகளை அடித்து காயப்படுத்தினோம் என்றால் சரியல்ல. எங்களுக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட வழக்கில் இருந்து தப்பிப்பதற்காகவும், பாலு வீடு கட்டுவதை தடுப்பதற்காகவும் எனது செல்வாக்கை பயன்படுத்தி காவல் கண்காணிப்பாளர் மூலம் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. போலீசார் எழுதி தரச்சொன்ன புகார் மூலம் மு.த.அறிக்கை பதிவு செய்யப்பட்ட பின்னர் மீண்டும் புகார் எழுதி பதிவு தபால் மூலம்

காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பினேன் என்றால் சரிதான். மேற்படி புகாரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். ஆய்வாளர் நான் கொடுத்த புகாரை பதிவு செய்யாததை காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகாரில் சொல்லியுள்ளேன். எதிரிகள் எனது அப்பா, அம்மாவை அடிக்கவில்லை என்றாலும் தகாத வார்த்தைகளால் பேசவில்லை என்றாலும் சம்பவம் நடக்கவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும் கொடுக்கப்பட்ட பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

<u>அரசு தரப்பில் மறுவிசாரணை:</u>

3. நான் கொடுத்த புகாருக்கும் போலீசார் எழுத சொல்லி கொடுக்கப்பட்ட புகாருக்கும் என்ன வித்தியாசம் உள்ளது என்றால் சம்பவத்தன்று 23.03.2019ம் தேதி காலை அரசு சர்வேயர் இடத்தை அளக்க வந்தபோது மேப் சரியாக இல்லாததால் மற்றொரு தேதியில் அளப்பதாக சொல்லிவிட்டு சென்றுவிட்டார். அன்று மாலை 3-4 மணியளவில் 1வது எதிரியும் மற்றும் இரண்டு நபர்களும் டேப்பை வைத்து அளந்தார்கள். சர்வேயர் வந்து அளந்த பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று அப்பா சொன்னதற்கு வீடு கட்டும் போது பார்த்துக்கொள் என்று சொல்லி 1வது எதிரி கேட்காமல் அளந்தார். அதனால அவர்கள் பொது ரோட்டையும் அளந்ததால் எனது அப்பா மறித்தார். 1வது எதிரி எனது அப்பாவை கீழே தள்ளிவிட்டார். எனது அம்மா தடுக்கபோனார். உடனே எனது அப்பாவை கீழே தள்ளிவிட்டு 1வது எதிரி மிதித்தார். தடுக்க வந்த எனது அம்மாவை கீழே தள்ளவிட்டு கீழே கிடந்த கல்லை எடுத்து 2வதுஎதிரி எறிந்தார். 3வது எதிரி கல்லை வைத்து அடித்தார். பின்னர் சித்தி வந்து சண்டையை விலக்கி கூட்டி வந்தார். அதன் பிறகு 1வது எதிரி எனது அப்பாவை கல்லால் எறிந்தார். மொத்த சம்பவத்தையும் எனது அண்ணியும், எனது தங்கையும் எனது அம்மாவின் செல்போனில் வீடியோ பதிவு செய்தார்கள். அந்த போன் தற்போது என் கைவசம் உள்ளது. இயங்கும் நிலையில் உள்ளதா என்று தெரியவில்லை.

4. அப்போதே எனது அம்மாவும், அப்பாவும் எஸ்வி.மங்கலம் காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தார்கள். அவர்கள் புகாரை பெற்றுக்கொள்ளாமல் அனுப்பி வைத்தார்கள். எனக்கு தகவல் சொன்னதால் நான் எனது அம்மா, அப்பாவை மருத்துவமனைக்கு போக சொன்னேன். மருத்துவமனையில் இருந்த போதும் புகார் எதுவும் பெறவில்லை. நான் 28.03.2019ம் தேதி இரவு 8 மணிக்கு வந்து மருத்துவமனைக்கு சென்று எனது அப்பா, அம்மாவை பார்த்தேன். காவல்நிலையத்திற்கு தகவல் தெரிவித்து விட்டதாக மருத்துவமனையில் சொன்னார்கள். அதன் பிறகு நான் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தேன். மேற்படி விபரங்களை மாவட்ட கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகாரில்தெரிவித்துள்ளேன். அந்த நகலை தற்போது வைத்துள்ளேன். அந்த நகலையும், எனது அம்மா முதன்முதலாக காவல்நிலையத்தில் கொடுத்த புகார் நகலையும் வைத்திருக்கிறேன்.

<u>எதிரிகள் தரப்பு மறு கு.வி.:</u>

மறு கு.வி. செய்ய வழக்கிறஞர் வேண்டுகோளின் பெயரில் ஒத்திவைக்கப்படுகிறது.